1992 செப்டம்பர் 21]

கொண்ட மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது தொகுதியின் சார்பில் நன்றியைக் கூறிக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஓராண்டுகாலமாக அந்த கம்பெனியின் உற்பத்தி நிறுத்தி வைக்கப்பட்டுள்ள காரணத்தினால் அந்தத் தொழிற்சாலையில் 1,500 குடும்பத்தினர் மிகவும கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கடந்த 6 மாதமாக சம்பளம் எதுவும் கொடுக்கப்படாமல் உள்ள காரணத்தால் அவர்கள் தங்களுடைய பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புவதற்கு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஏனெனில் கம்பெனியில் வேலை செய்யும் தொழிலாளர்கள் மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சார்ந்தவர்கள். 1990–91 ஆம் ஆண்டுக்கான தீபாவளி போனஸ் கூட இன்னும் அவர்களுக்கு வழங்கப்படாமல் உள்ளது. எனவே தாயுள்ளம் கொண்ட டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் கம்பெனி தனது உற்பத்தியை கூடிய விரைவில் தொடங்குவதற்கு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–50

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று சொன்ன வள்ளலாரைப் போல இன்றைக்கு அருட்பெரும் ஜோதி தனிப் பெருங் கருணையாக ஒளி வெள்ளத்தோடு தனது ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிற மனிதாபிமானம் மிக்க டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு (மேசையைத் தட்டும் ஒலி) உரிய முயற்சிகளை மேற்கொண்டு கடந்த மார்ச மாதம் வரைக்கான சம்பளத்தில் ஆயிரம் ரூபாய் இப்போது கொடுக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டுக்கான போனஸ் தொகையைப் பெற்றுத் தருவதற்காக மாண்புமிகு டாக்டர் புரட்சி தலைவி அவர்களின் அரசினுடைய தொழிலாளர் நலத்துறை உரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 13, திரு. எஸ். அன்பழகன், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்:

13—

நாமக்கல்லில் தவிட்டு எண்ணெய்த் தொழிற்சாலை.

* 9554—திரு. எஸ். அன்பழகன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நாமக்கல்லில் தவிட்டிலிருந்து எண்ணெய் பிழியும் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாமக்கல்லில் தவிட்டிலிருந்து எண்ணெய் பிழியும் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதை அரசு அறியும்.

திரு. எஸ். அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நாமக்கல் தொகுதியிலுள்ள பல குடும்பங்கள் அந்தத் தொழிற்சாலையை நம்பிக் கொண்டு இருந்தன. அப்படிப்பட்ட தொழிற்சாலை மூடப்பட்டதற்கான காரணங்களையும், அதில் வேலை செய்த தொழிலாளர்களுடைய தற்போதைய நிலை என்ன என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 17.1-1977 ஆம் ஆண்டு முதல் இந்த ஆலையை 'தாய்' நிறுவனம் எடுத்து நடத்தியது. 1978 ஆம் ஆண்டு முதல் உற்பத்தியை ஆரம்பித்தது. ஒரு நாளைக்கு 15 மெட்ரிக் டன் அரிசி தவிடும், 20 மெட்ரிக் டன் எண்ணெய் பிண்ணாக்கு அறைக்கும் திறன் உடைய இந்த ஆலை குறைந்த திறன் அறவைக் கொண்டதால் நிகர லாபம் ஈட்டித் தர இயலவில்லை. எனவே, இந்த ஆலை நட்டத்தில் இயங்கத் தொடங்கியது. 14-9-1984-ல் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு இந்த ஆலையின் செயல்பாட்டை ஆராய்ந்து இந்த ஆலையை மூடுவதற்கு அரசுக்கு சிபாரிசு செய்தது. 14-10-1988-ல் இந்த ஆலையை மூடுவது என அரசு முடிவு செய்தது. இந்த ஆலையில் பணியாற்றிக் கொண்டு இருந்த 30 நிரந்தரப் பணியாளர்கள் பணி நீக்கம் செய்யப்படவில்லை. மாறாக வேறு இடங்களில் பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 14, திரு. தி. சாத்தையா, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

14—

சத்திரப்பட்டியில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடுகள்.

*9905—திரு. தி. சாத்தையா:
மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) இராஜபாளையம் ஒன்றியம் சத்திரப்பட்டியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?